செ.வெ.எண்: 13 / ஆகஸ்ட் நாள் : 07.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு மணல் குவாரிகளில் மணல் ஏற்றிச் செல்லும் லாரி உரிமையாளர்களின் வாகனங்களுக்கான ஆவணங்களை சரிபார்க்கும் சிறப்பு முகாமினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்

இராமநாதபுரம் மாவட்டம், சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி எதிரில் அமைந்துள்ள உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, உத்திரகோசமங்கை வடிநில உபகோட்ட அலுவலகத்தில் இன்று (07.08.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், அரசு மணல் குவாரி வாகன ஆவணங்கள் சரிபார்க்கும் சிறப்பு முகாமினை துவக்கி வைத்தார்.

முகாமினைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழகத்தில் நிலவி வரும் மணல் தட்டுப்பாட்டினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், பொதுமக்களுக்கு மணலை குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் அனைத்து மணல் குவாரிகளையும் பொதுப்பணித்துறையின் மூலம் நேரடியாக அரசே மணல் விற்பனை செய்து வருகிறது. இந்நிலையில், குவாரிகளில் வாகனங்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு, தமிழக அரசு www.tnsand.in என்ற இணையதள சேவையினை தொடங்கி உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் குவாரிகளில் மணல் ஏற்றிச் செல்லும் லாரி உரிமையாளர்கள் தங்கள் வாகனங்கள் குறித்த விபரங்களை www.tnsand.in இணையதளத்தில் கட்டாயம் பதிவு செய்திட வேண்டும். லாரி உரிமையாளர்கள் தங்கள் வாகனத்தைப் பதிவு செய்து, குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் குவாரியில் இருந்து மணல் எடுத்துக்கொள்ளலாம்.

பதிவு செய்த விபரங்களை சரிபார்ப்பதற்கான சிறப்பு முகாம் இன்று (07.08.2017) முதல் 11.08.2017 வரை ஐந்து நாட்கள் நடைபெறுகின்றது. இம்முகாமில் அனைத்து லாரி உரிமையாளர்களும் இணையதளத்தில் பதிவு செய்த நகல் மற்றும் வாகனம் தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன் முகாமில் கலந்து கொண்டு பதிவினை உறுதி செய்து பயன்பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இம்முகாமில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.சீ.வெங்கடகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் திரு.க.சிவராமகிருஷ்ணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், லாரி உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**